### திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி 1-4 - ஏனமுனாகி
### (திருவதரியாச்சிரமம்)

978 * ஏனமுனாகி இருநிலம் இடந்து *
அன்று இணையடி இமையவர் வணங்க *
தானவன் ஆகம் தரணியில் புரளத் *
தடஞ்சிலை குனித்த என் தலைவன் **
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த *
தெய்வ நல் நறுமலர் கொணர்ந்து *
வானவர் வணங்கும் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 1

979 கானிடை உருவைச் சுடு சரம் துரந்து *
கண்டு முன் கொடுந்தொழில் உரவோன் *
ஊனுடை அகலத்து அடுகணை குளிப்ப *
உயிர் கவர்ந்து உகந்த எம் ஒருவன் **
தேனுடைக் கமலத்து அயனொடு தேவர் *
சென்று சென்று இறைஞ்சிட * பெருகு
வானிடை முது நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 2

980 இலங்கையும் கடலும் அடலருந்துப் பின் *
இருநிதிக்கு இறைவனும் * அரக்கர்
குலங்களும் கெட முன் கொடுந்தொழில் புரிந்த கொற்றவன் *
கொழுஞ்சுடர் சுழன்ற **
விலங்கலிலுரிஞ்சி மேல் நின்ற விசும்பில் *
வெண்துகிற் கொடி என விரிந்து *
வலந்தரு மணி நீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 3

981 துணிவு இனி உனக்குச் சொல்லுவன் மனமே! *
தொழுதெழு தொண்டர்கள் தமக்கு *
பிணி ஒழித்து அமரர் பெருவிசும்பு அருளும் *
பேரருளாளன் எம்பெருமான் **
அணிமலர்க் குழலார் அரம்பையர் துகிலும் *
ஆரமும் வாரி வந்து * அணிநீர்
மணி கொழித்து இழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 4

982 பேயிடைக்கிருந்து வந்த மற்றவள் தன் *
பெருமுலை சுவைத்திட * பெற்ற

தாயிடைக்கிருத்தல் அஞ்சுவன் என்று தளர்ந்திட *
வளர்ந்த என் தலைவன் **
சேய்முகட்டுச்சி அண்டமும் சுமந்த *
செம்பொன்செய் விலங்கலில் இலங்கு *
வாய்முகட்டிழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 5

983 தேரணங்கு அல்குல் செழுங்கையற் கண்ணி திறத்து *
ஒரு மறத் தொழில் புரிந்து *
பாரணங்கிமில் ஏறேழும் முன் அடர்த்த *
பனிமுகில் வண்ணன் எம்பெருமான் **
காரணந்தன்னால் கடும்புனல் கயத்த[1] *
கருவரை பிளவெழக் குத்தி *
வாரணம் கொணர்ந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 6

984 வெந்திறல் களிறும் வேலை வாய் அமுதும் *
விண்ணொடு விண்ணவர்க்கு அரசும் *
இந்திரற்கருளி எமக்கும் ஈந்தருளும் *
எந்தை எம் அடிகள் எம்பெருமான் **
அந்தரத்து அமரர் அடியிணை வணங்க *
ஆயிர முகத்தினால் அருளி *
மந்தரத்திழிந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 7

985 மான் முனிந்து ஒருகால் வரிசிலை வளைத்த மன்னவன் *
பொன்னிறத்து உரவோன் *
ஊன் முனிந்து அவனது உடல் இருபிளவா *
உகிர் நுதி மடுத்து ** அயன் அரனைத்
தான் முனிந்திட்ட * வெந்திறல் சாபம் தவிர்த்தவன் *
தவம் புரிந்து உயர்ந்த
மாமுனி கொணர்ந்த கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானே 8

986 கொண்டல் மாருதங்கள் குலவரை தொகுநீர்க் *
குரைகடல் உலகுடன் அனைத்தும் *
உண்ட மாவயிற்றோன் ஒண் சுடர் ஏய்ந்த *
உம்பரும் ஊழியும் ஆனான் **
அண்டம் ஊடறுத்து அன்று அந்தரத்திழிந்து *
அங்கு அவனியாள் அலமர * பெருகும்
மண்டு மாமணிநீர்க் கங்கையின் கரை மேல் *

---

[1] தகைத்த

வதரியாச்சிராமத்து உள்ளானே 9

987 * வருந்திரை மணிநீர்க் கங்கையின் கரை மேல் *
வதரியாச்சிராமத்து உள்ளானை *
கருங்கடல் முன்னீர் வண்ணனை எண்ணிக் *
கலியன் வாயொலி செய்த பனுவல் **
வரஞ்செய்த ஐந்தும் ஐந்தும் வல்லார்கள் *
வானவர் உலகுடன் மருவி *
இருங்கடல் உலகம் ஆண்டு வெண்குடைக் கீழ் *
இமையவர் ஆகுவர் தாமே 10

**அடிவரவு:** ஏனம் கானிடை இலங்கை துணிவு பேய் தேர் வெந்திறல் மான் கொண்டல் வருந்திரை கலை